FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120369

1. District : Salem District PS: VAAC Year: 2025 FIR No.: 12/AC/2025 Date: 01.08.2025
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(a)

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 02.08.2025 at about 15.45 hrs
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

   Time Period : Time from : Time to :
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

   (b) Information Received at PS. Date : 01.08.2025 Time : 07.00 hrs
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

   (c) General Diary Reference : Entry No(s) Time :
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Computer typed complaint
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 1 KM West
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

   Beat Number : (b) Address : Kongarapuram Police Station, Salem
   முறைக் காவல் எண் முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. Palanisamy (b) Father's/ Husband's Name : Sengodan
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : 32 (d) Nationality : (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : Place of Issue :
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : Textile business (g) Address : 5-161, Thoppabadu, Kooranampatty (P.O) Edapady, Salem
   தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Tr. Senthil Kumaran, SI of Police, Kongarapuram police Station, Salem
   2) Tr. Muthumanikam, SSI of Police, Kongarapuram police Station, Salem

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S.D. 4/8/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

4.8.2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

4.8.2025 at 09.00hrs

Name: பெயர் D. RAVI KUMARI

Rank: நிலை .....No. எண் .....

Inspector of Police
VHAT, Salem

சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 12/AC/2025 சட்டப்பிரிவு 7 (a) of PC Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், கோரணம்பட்டி அஞ்சல், கதவு எண்.5–16 A, தொப்பக்காட்டை சேர்ந்த செங்கோடன் மகன் பழனிசாமி என்பவர் இன்று 04.08.2025 ந் தேதி காலை சுமார் 07.00 மணிக்கு சேலம் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி காவல் ஆய்வாளரிடம் கொடுத்த கம்ப்யூட்டரில் டைப் செய்யப்பட்ட எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புனர், செ.பழனிசாமி(32/25), த/பெ செங்கோடன், கதவு எண்.5–16 A, தொப்பக்காடு, கோரணம்பட்டி அஞ்சல், எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம், பெறுதல், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு பிரிவு, சேலம். ஐயா, நான் எனது குடும்பத்துடன் எனது வீட்டிலேயே பவர்லூம் போட்டு தறி ஓட்டி வருகிறேன். மேலும் நான் எடப்பாடி, எட்டிக்குட்டைமேடு, கச்சுப்பள்ளி அஞ்சல், என்ற இடத்தில் எனது நண்பரான நடராஜ் என்பவரின் சொந்தவீட்டை வாடகைக்கு எடுத்து அந்த இடத்தில் கேரளா லாட்டரி வியாபாரம் நடத்தி வந்தேன். அப்போது கடந்த 26.7.2025ம் தேதி சனிக்கிழமை காலை சுமார் 12 மணிக்கு மேற்படி வீட்டில் நானும், எனது நண்பர் கணபதி என்பரும் லாட்டரி சீட் வாங்க வந்திருந்த நான்கு வாடிக்கையாளர்களுக்கு 3 நம்பர் சீட்டு லாட்டரி எழுதி கொடுத்துக்கொண்டிருந்தேன். அப்போது கொங்கணாபுரம் காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் முத்துமாணிக்கம் மற்றும் போலீஸ் பார்டியினர் மேற்படி இடத்திற்கு வந்து என்னை விசாரித்தார்கள். பின்னர் 3 நம்பர் லாட்டரி சீட்டுகள் 16 சீட்டுகளும் என்னிடம் இருந்த லாட்டரி சீட்டு விற்பனை செய்த பணம் ரூ.14,160/– தையும் பறிமுதல் செய்து கொண்டார்கள். மேலும், எனது சொந்த இருசக்கர வாகனம் Royal Enfield பதிவு எண்.TN 52 L 5127 என்ற வண்டியையும், மேற்படி வீட்டை எனக்கு வாடகைக்கு விட்டிருந்த திரு.நடராஜன் என்பவரின் இருசக்கர வாகனம் Honda Activa பதிவு எண்.TN 52 AD 5058 என்ற வண்டியையும் பறிமுதல் செய்து கொங்கணாபுரம் காவல் நிலையத்திற்கு என்னையும் எனது நண்பர் கணபதி மற்றும் 4 வாடிக்கையாளர்களையும் அழைத்து வந்தார்கள். பின்னர் காவல் நிலையத்தில் வைத்து FIR பதிவு செய்தார்கள். அந்த FIR பதிவு செய்தது திரு.செந்தில்குமரன் காவல் உதவி ஆய்வாளர் ஆவார். அவரே raid செய்ததாகவும், லாட்டரி சீட்டுகள் மற்றும்

பணம் ரூ.14,160/– பறிமுதல் செய்ததாகவும் FIR பதிவு செய்யப்பட்டது. பின்னர் FIR–ல் முதல் எதிரியாக என்னையும் தலைமறைவு எதிரியாக நடராஜன் என்பவரையும் காண்பிக்கப்பட்டது. பின்னர் என்னிடம் மட்டும் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் என்று கூறி கையெழுத்து வாங்கி கொண்டார்கள். என்னுடன் அழைத்து வரப்பட்ட எனது நண்பரான கணபதியையும் மற்றும் 4 வாடிக்கையாளர்களையும் வெளியே அனுப்பி விட்டார்கள். பின்னர் எனக்கு ஜாமின் கையொப்பம் செய்ய எனது நண்பர்கள் திரு.சிவா மற்றும் பிரகாஷ் ஆகியோர்கள் காவல் நிலையம் வந்து கையெழுத்து போட்டு என்னை வீட்டிற்கு அழைத்து சென்றார்கள். பின்னர் 2.8.2025ம் தேதி சனிக்கிழமை மதியம் சுமார் 3.45 மணிக்கு நான் கொங்கணாபுரம் காவல் நிலையத்திற்கு சென்று எனது இருசக்கர வாகனத்தை வெளியே எடுப்பதற்கு சென்றிருந்தேன். அப்போது காவல் உதவி ஆய்வாளர் திரு.செந்தில்குமரன் மற்றும் முத்துமாணிக்கம் ஆகியோர்கள் காவல் நிலையத்திற்கு வெளியே உள்ள இடத்தில் ஒரு செட் போடப்பட்டிருந்த இடத்தில் அவர்கள் இருவரும் அமர்ந்திருந்தார்கள். அப்போது திரு.செந்தில்குமரன் அவர்களை சந்தித்து வாகனத்தை வெளியே எடுக்க வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் நான் முதலில் தேவையான ஆவணங்களை தயார் செய்கிறேன் அப்போதுதான் வாகனத்தை கோர்ட்டில் ஒப்படைக்க முடியும். அதற்கு நீ ரூ.10,000/– என்னிடம் கொடுத்துவிடு என்று சொன்னார். பின்னர் கோர்டில் fine கட்டிவிட்டு வா உனது வாகனத்தை எடுத்துக்கொள்ளலாம் என்றும் கூறினார். அதற்கு நான் என்னால் அவ்வளவு பணம் ஏற்பாடு செய்யமுடியாது என்று கூறினேன். அதற்கு அருகில் அமர்ந்திருந்த திரு.முத்து மாணிக்கம் என்ற சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் வேறு வழியில்லை, அவர் கேட்ட பணம் ரூ.10,000/–தை ஏற்பாடு செய்து கொடுத்து விடு இல்லையென்றால் உனது வண்டியை சீக்கிரமாக வெளியே எடுக்க முடியாது என்று கண்டிப்புடன் கூறினார். எனவே லஞ்சமாக பணம் கொடுத்து எனது வண்டியை வெளியில் எடுக்க எனக்கு விருப்பமில்லை. நான் தற்போது ரூ.10,000/– ஏற்பாடு செய்து வந்துள்ளேன். என்னிடம் லஞ்சம் கேட்ட காவல் உதவி ஆய்வாளர் திரு.செந்தில்குமரன் மற்றும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.முத்துமாணிக்கம் ஆகியோர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு sd/-xxxxxxxx (செ.பழனிசாமி) 04.08.2025.

Sir, Received the computer typed complaint today on 04.08.2025 at 07.00 hrs and registered a case in Salem V&AC Cr.No.12/AC/2025 u/s 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 today 04.08.2025 at 08.00 hrs after making a confidential verification on the general reputation of the accused persons which is learnt to be not good. Similarly, the antecedents of the informant was also verified and nothing came to adverse. Oral concurrence of the Superintendent of Police, West Range was also obtained. Sd XXXX (R.D.RAVIKUMAR) 04.08.2025, Inspector of Police, V&AC, Salem.

The original complaint and original FIR was sent to the Hon'ble court of the Principal District and Sessions Judge, Salem and the remaining copies were sent to the officers concerned.

4.8.25

(R.D.RAVIKUMAR)
Inspector of Police,
Vigilance and Anti – Corruption,
Salem.